Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), மதுரை மண்டலம், மதுரை
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை திரு..ப.வேல்முருகன், பி.இ.,

ந.க.எண்.6231/2018 மம 3, நாள்.19.12.2018.

திருவள்ளுவர் ஆண்டு 2049, விளம்பி வருடம், மார்கழி திங்கள் 04 -ஆம் நாள்.

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் - மதுரை மண்டலம் - திண்டுக்கல் மாவட்டம் - திண்டுக்கல் கிழக்கு வட்டம் - சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் - மரூர் ஊராட்சி/கிராமம் - சர்வே எண். 49/1A1-ல் 1.37 ஏக்கர் (5544.20 ச..மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1 அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 04.05.2017.
2 அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 13.10.2017 மற்றும் அரசாணை (நிலை) எண்.55, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 2.5.2018
3 நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை -02, அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண். 13193/2017/எல்ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
4 மனுதாரர் திருமதி.S.பஞ்சவர்ணம் அவர்களின் விண்ணப்பம் எண். DTCP/L/0165731/2017, நாள்.29.04.2018.

*****

உத்தரவு :

பார்வை (1) மற்றும் (2)-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (4)-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், மரூர் ஊராட்சி/கிராமம், சர்வே எண்.49/1A1-ல் 1.37 ஏக்கர் (5544.20 ச..மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ(மு)/ந.ஊ.து.இ(மம) எண்.872/2018** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மனைப்பிரிவின் மொத்த பரப்பு	:	1.37 ஏக்கர் (5544.20 ச.மீ)
சமர்ப்பிக்கப்பட்ட வரைபடத்தின்படி மொத்த மனைகள் (1-17)	:	33 எண்ணம்.
ஒதுக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை	:	29 எண்ணம்.
ஒதுக்கப்பட்ட மனை எண்கள்	:	1-7, 7A, 9-13, 15-17, 20-32
விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை	:	07 எண்ணம்.
விற்கப்பட்ட மனை எண்கள்	:	7A, 9, 11, 12, 13, 25, 26

S. Panchavarnam.

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை : 22 எண்ணம்.

விற்கப்படாத மனை எண்கள் : 1-7, 10, 15-17, 20-24, 27-32

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு : 336.70 ச.மீ (10.03 %)

செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்

1 பரிசீலனைக் கட்டணம்

இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம்	1-7, 10, 15-17, 20-24, 27-32

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

2 வரன்முறைபடுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்

ஒதுக்கப்பட்ட மனை எண்கள்.	வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30 /- வீதம்)	வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/-வீதம்)
29 மனைகள் 1-7, 7A, 9-13, 15-17, 20-32	வரன்முறைப்படுத்தப்பட வேண்டிய ஒவ்வொரு மனைக்கும் சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் செலுத்தப்படல் வேண்டும்.	வரன்முறைப்படுத்தப்பட வேண்டிய ஒவ்வொரு மனைக்கும் சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் செலுத்தப்படல் வேண்டும்.

மேற்காண் 2முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

(அ). வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:

0217 Urban Development - 60 Other Urban Development Scheme - 800. Other receipts AT Receipts under Regularisation charges of Unapproved layout and Plots - DTCP 27 Non Taxation Fees - 30 Regularisation. (DPC 0217 60 800 AT 2730)	சலான் மூலம் அரசு கருவுலத்தில் செலுத்தலாம்.

(ஆ). வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் : உள்ளாட்சியில் பெற்று செலுத்தப்படல் வேண்டும்

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படல் வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கும் அல்லது முறைப்படுத்தக் கோரும் மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை (1) மற்றும் (2)-ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1 அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 13.10.2017-ல் விதி எண். 7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2 நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

3 ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் முழுமையாக பின்பற்றப்படல் வேண்டும்.

S. Panchavarnam.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மதுரை மண்டலம்.

21/10/14

<u>இணைப்பு</u>

மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.

<u>பெறுநர்</u>

தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம்,
திண்டுக்கல் மாவட்டம்.

<u>நகல்</u>

1 திருமதி.S. பஞ்சவர்ணம்,
W/O, R.Sakthivel,
8-1-46B, சக்தி இல்லம்,
EB காலனி, வடமதுரை - 624 802,
திண்டுக்கல் மாவட்டம்.
} கடித நகல் மட்டும்

2 உதவி இயக்குநர்,
நிலஅளவை பதிவேடுகள் துறை,
திண்டுக்கல் மாவட்டம்.
} சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு.

3 சார் பதிவாளர்,
வடமதுரை சார்பதிவாளர் அலுவலகம்,
திண்டுக்கல் மாவட்டம்.
} சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு.

4 தொழில்நுட்ப வைப்பறை - 1 வரைபடம்.

S. Panchavarnam.

மடூர் ஊராட்சி தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), சாணார்பட்டி
அவர்களின் நடவடிக்கைகள் பிறப்பிப்பவர்: திரு.ஆ.சிவலிங்கராஜசுப்பிரமணி

ந.க.எண்.423/2018/தி3 நாள்:7 .02.2019

பொருள் : மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - திண்டுக்கல் மாவட்டம் - திண்டுக்கல் கிழக்கு வட்டம் - சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம் - மடூர் ஊராட்சி - புகையிலைப்பட்டி கிராம சர்வே எண்:49/1A1-ல் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளை முறைப்படுத்தி நகர் ஊரமைப்பு துறையினரால் அனுமதி வழங்கப்பட்டது - மனைக்கு கட்டணங்கள் செலுத்தி வரன்முறை செய்யக் கோரி விண்ணப்பித்துள்ளது - வரன்முறைப்படுத்தி உத்தரவிடல்.

பார்வை : 1. அரசாணை நிலை எண் : 78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் : 04.05.2017

2. அரசாணை நிலை எண் : 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் : 13.10.2017

3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் , மதுரை அவர்களின் கடித ந.க.எண்:6231/2018/மது3, நாள்:19.12.2018

4. திருமதி.எஸ்.பஞ்சவர்ணம் க/பெ சக்திவேல்,8-1-463B, சக்தி இல்லம், இபி காலனி, வடமதுரை-624 802, திண்டுக்கல் மாவட்டம். விண்ணப்பம் நாள் : 28.12.2018

5. மடூர் ஊராட்சி மன்ற தீர்மானம் எண் :16/2019, நாள்: 06.02.2019

<u>ஆணை</u>

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், மடூர் ஊராட்சி, புகையிலைப்பட்டி கிராம சர்வே எண்:49/1A1-ல் 3020 சதுர அடி பரப்பளவில் உள்ள மனைகளுக்கு பார்வை 1 மற்றும் 2-ல காணும் அரசாணைகளின்படி வரன்முறை செய்யுமாறு மேற்படி மனைப்பிரிவின் உரிமையாளரான திருமதி.எஸ்.பஞ்சவர்ணம் க/பெ சக்திவேல், என்பவர் விண்ணப்பித்திருந்தார்.

இவருடைய விண்ணப்பத்தைப் பரிசீலித்து மதுரை நகர ஊரமைப்பு துணை இயக்குநர் பார்வை 3-ல் காணும் கடிதம் வாயிலாக மேற்படி மனைப்பிரிவிற்கு வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் பெற்றுக் கொண்டு உள்ளாட்சி நிறுவனமே வரன்முறைப்படுத்தி கொள்ள அனுமதி அளித்து உத்தரவிடப்பட்டுள்ளார்.

S. Pancharvarnam.

C:\USERS\SP\DOWNLOADS\2012\T.DOCX

மேற்படி மனைகளுக்கு தற்போது பரிசீலனைக் கட்டணம், வரன்முறைக் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் செலுத்தபபட்டுள்ளதாகவும். அவற்றைப் வரன்முறை செய்து உத்தரவு வழங்குமாறும் பார்வை 4-இல் காணும் விண்ணப்பத்தில் நிலப்பிரிவு உரிமையாளர் கேட்டுள்ளார்.

மனைகளுக்கான பரப்பளவு 3020 சதுர மீட்டர் ஆகும். மனைக்கான பரிசீலனைக் கட்டணம் ரூ.11000/- செலுத்தப்பட்டு வரன்முறைக் கட்டணம் சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் 3020 சதுர மீட்டருக்கு ரூ.90600/ - மட்டும் அரசு கணக்கு தலைப்பில் 01.02.2019 அன்று செலுத்தியும் மேலும், வளர்ச்சிக்கட்டணமாக சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் 3020 சதுர மீட்டருக்கு ரூ.75500/- மட்டும் மடூர் ஊராட்சி கணக்கு எண்:1577101055305-ல் (கனரா பேங்க், நொச்சிஓடைபட்டி) 31.01.2019 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக மனைகளுக்கு தற்போது வரன்முறைபடுத்த மடூர் ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே மனை எண்கள்:1-7, 10, 15-17, 20-24, 27-32 (3020 சதுர மீட்டர்) ஆகிய மனைகளுக்கு வரன்முறைப்படுத்தி இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

<u>மனை எண்கள் (Plot Numbers)</u>

மனை எண்கள்:1-7, 10, 15-17, 20-24, 27-32 (3020 சதுர மீட்டர்)

<u>நிபந்தனைகள்</u>

1. அரசாணை எண் 78 வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சி துறை நாள் : 04.05.17 மற்றும் அரசாணை எண் 172 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 13.10.2017ல் கண்டுள்ள வழிகாட்டுதலின்படி மேலே குறிப்பிட்டுள்ள மனைக்கு தற்போது வரன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றன.

2. மனைப்பிரிவில் உள்ள மனைகள் வரன்முறைப்படுத்தப்படும் பொழுது அம்மனைகளின் அளவுகளுக்கு ஏற்ப பத்திரப்பதிவில் அமைந்துள்ளபடியே உரிய கட்டணங்கள் பெற்று வரன்முறைப்படுத்தப்படல் வேண்டும் என்ற விதிமுறைக்கேற்ப உரிய கட்டணம் பெறப்பட்டுள்ளது.

3. இந்த அனுமதியற்ற மனைப்பிரிவுக்கு கொள்கை அளவில் (In principle approval Layout Frame work) ஒப்புதல் மட்டும் அளிக்கப்படுகிறது. அரசாணை 78 பிரிவு 5(4) மற்றும் அரசாணை எண் 172 பிரிவு 7G(i).

4. நில உரிமை குறித்து நில உரிமையாளர் தற்போது சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் திருப்தியளிக்கும் வகையில் உள்ளதாகக் கருதப்பட்டு இந்த வரன்முறை உத்தரவு வழங்கப்படுகிறது. எதிர்காலத்தில் இவர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களில் தவறுகள் கண்டறியப்படின் இவ்வுத்தரவு உடனடியாக இரத்து செய்யப்பட்டு அவர்மீது சட்டரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

C:\USERS\SPL\DOWNLOADS\2013\D.DOCX

S. Panchavarnam.

5. அனுமதியற்ற மனைப்பிரிவு இடத்திற்கு நீதிமன்ற ஆட்சேபனை மற்றும் சட்டப்பூர்வமான புகார் மற்றும் வில்லங்கம் தெரியப்படின் ஊராட்சி தனி அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்புத்துறையினரின் ஆய்வுக்குட்பட்டு இந்த ஒப்புதல் ரத்து செய்யப்படும்.

6. ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட இடங்களை வரன்முறை செய்வது குறித்து அரசு விதிமுறைகளுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும்.

7/2/19

தனி அலுவலர் மடூர் ஊராட்சி/
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம்.

7/2/19

பெறுநர் :

திருமதி.எஸ்.பஞ்சவர்ணம்,
க/பெ சக்திவேல்,
8-1-463B, சக்தி இல்லம்,
இபி காலானி,
வடமதுரை 624 802,
திண்டுக்கல் மாவட்டம்.

நகல்

1. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), திண்டுக்கல் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்-4, ஹக்கீம் அஜ்மல்கான் ரோடு, சின்னசொக்கிகுளம், மதுரை -2.
3. சார்பதிவாளர், சாணார்பட்டி.
4. ஊராட்சி செயலர், மடூர் ஊராட்சி .

S. Panchavarnam.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate